# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

## අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

## அதி விசேஷமானது

අංක 1133/9 – 2000 මැයි 23 වැනි අඟහරුවාද – 2000.05.23

*1133/9 ஆம் இலக்கம் – 2000 ஆம் ஆண்டு மே மாதம் 23 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


# பகுதி I : தொகுதி (I) — பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச. வ. பீ. 21/78* IV

**1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டம்**

*1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 18 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 140 ஆம் பிரிவின் கீழ் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஆக்கப்பட்ட கட்டளை விதி*

செயலாளர்,
பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு.

கொழும்பு,
2000, வைகாசி 08.

**கட்டளைவிதி**

1. இக்கட்டளை விதி, 2000 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க மருத்துவ பட்டப்பின்படிப்பு நிறுவக (திருத்தக்) கட்டளைவிதி என எடுத்தக்காட்டப்படலாம் என்பதுடன், 2000 ஆம் ஆண்டு ஆனி மாதம் 1 ஆந் தேதியிலிருந்து நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

2. 1996 மே 9 ஆந் திகதிய 922/9 ஆம் இலக்க அதிவிசேடமான வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 1996 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க மருத்துவ பட்டப்பின்படிப்பு நிறுவக (திருத்தக்) கட்டளை விதியின் மூலம் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான, 1980, ஏப்பிறல் 10 ஆந் திகதிய 83/7 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 1980 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க மருத்துவ பட்டப்பின்படிப்பு நிறுவகக் கட்டளைவிதி இத்தால் மேலும் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(1) அதற்கான 13 ஆம் பந்தியின் (ஞ) என்னும் உட்பந்தியில் "ஊடு கதிர் மருத்துவ முறையும் ஒண்கோவியலும்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "பிணியாய்வு நிலையம் சார் ஒண்கோவியல்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ;

(2) அதன் 14 ஆம் பந்தியில் –

(i) அதற்கான (1) ஆம், (2) ஆம் உட்பந்திகளை நீக்கிவிட்டு அவற்றிற்குப் பதிலாகப் பின்வரும் உட்பந்திகளை இடுவதன் மூலமும் :—

"(1) இலங்கையில் உள்ள பல்கலைக்கழகம் ஒன்றாலோ அல்லது ஒன்றுக்கு மேற்பட்டவையாலோ தாபிக்கப்பட்ட கற்கைத்துறையொன்றுக்கான சிறப்புக் கூறொன்று தொடர்பில் கற்கைச் சபையொன்று